SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING

# ‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு’ என் குழந்தைக்கு ஏன் அவசியப்படுகிறது?



முதலாவதாக செய்யப்படும் இரண்டு செவித்திற திரைப் பரீட்சைகளிலும் தெளிவான முடிவு கிடைக்கவில்லை என்றால், உங்கள் குழந்தைக்கு ‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு’ (diagnostic assessment) ஒன்றிற்கான அவசியம் ஏற்படும்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

காரணங்களில் கீழ்வருவன அடங்கலாம்:

- பிறந்த பிறகு குழந்தையின் காதில் திரவச் சுரப்போ அல்லது அடைப்போ இருந்திருக்கிறது
- குழந்தைக்கு சிறிதளவு செவித்திறன் இழப்பு இருந்திருக்கலாம்

உங்கள் குழந்தைக்கு சரியான அறிவுரை-ஆலோசணையும், உதவியும் வழங்கப்பட உதவும் வகையில் உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் எந்த அளவிற்கு உள்ளது என்பதை கூடிய விரைவில் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மருத்துவமனையிலிருந்து 100 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட தொலைவில் நீங்கள் வசிப்பவரானால், ‘SWIS-H பயண உதவித் திட்டம்’ குறித்து இத் தகவலேட்டை உங்களுக்குக் கொடுத்தவரிடம் கேளுங்கள்.

## ‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீட்டி’ ன் போது என்ன நடக்கும்?

உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பல சோதனைகள் செய்யப்படும்.

செவித்திறனை சோதிப்பதில் தேர்ச்சி பெற்ற ‘ஒலியியலாளர்’ (audiologist) ஒருவர் இச் சோதனைகளைச் செய்வார். இம் மதிப்பீடு இலவசமாகும்.

இச் சோதனைகளில் எதுவும் உங்கள் குழந்தைக்கு தீங்கு விளைவிக்காது.

## இம் மதிப்பீட்டிற்கென குழந்தையை எப்படி நான் ஆயத்தப்படுத்த வேண்டும்?

இச் சோதனைகளின் போது குழந்தை தூங்கிக் கொண்டிருப்பது மிகவும் நல்லது. எனவே, குழந்தைக்குப் பாலூட்டி அதைத் தூங்க வைப்பதற்கு ஏதுவாக சிறிது முன்னதாகவே வருதல் நலம்.

மதிப்பீட்டுச் சோதனைகளின் போது தொடர்ந்து நீங்கள் குழந்தையுடன் இருக்க உதவும் வகையில், உங்களுக்கு வேறு குழந்தைகள் இருந்தால் அவர்களை வீட்டில் வைத்து கவனித்துக்கொள்ள யாரையாவது ஏற்பாடு செய்யுங்கள். சோதனைகளின் போது சூழ்நிலைகள் அமைதியாக இருக்கவேண்டியது கட்டாயம்.

இந்த மதிப்பீட்டில் பல சோதனைகள் அடங்கியிருப்பதால், மதிப்பீட்டிற்காக உங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் நேரத்தைப் பொறுத்து, காலை அல்லது மாலை நேரத்தை இதற்காக ஒதுக்குங்கள். உங்களுக்கு உதவியாக இருப்பதற்காக இன்னொருவரையும் நீங்கள் உடன் அழைத்து வரலாம்.

## ‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு’ எவ்வாறு நடத்தப்படும்?

இந்த மதிப்பீட்டுச் சோதனை ‘Auditory Brainstem Response (ABR)’ என்றழைக்கப்படும். முதலாவது செவித்திற திரைப் பரீட்சையின் போது பயன்படுத்தப்பட்டது போன்ற ‘உணர்வறிவிகள்’ (sensors) குழந்தையின் தலையில் பொருத்தப்படும். காதில் பொருத்தப்படும் ஒலிப்பான்கள் (headphones) வழியாக உங்கள் குழந்தையின் காதில் ஒலிகள் செலுத்தப்படும். இந்த ஒலிகளுக்கு உங்கள் குழந்தை என்ன எதிர்ச்செயல் புரிகிறது என்பது பதிவு செய்யப்படும். உங்கள் குழந்தையால் கேட்க இயலக்கூடிய மிக மென்மையான ஒலிகள் என்ன என்பதை குழந்தையின் எதிர்ச்செயல்கள் காண்பிக்கும்.

## இம் மதிப்பீட்டிற்குப் பிறகு என்ன நடக்கும்?

பொதுவாக சோதனை நடத்தப்படும் அன்றே ‘ஒலியியலாளர்’ (Audiologist) முடிவுகளை உங்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றின் அர்த்தம் என்ன என்பதை விளக்கிச் சொல்வார்.

உங்கள் குழந்தைக்கு செவித்திறனில் இழப்பு இருக்கிறது என்று கண்டறியப்பட்டால், நி.ச.வே. மாநிலத்திலுள்ள மூன்று ‘நி.ச.வே. குழந்தை மருத்துவமனைக’ளில் ஒன்றில் விசேட மருத்துவசேவைகளுக்காக நீங்கள் பரிந்துரைக்கப்படுவீர்கள். அறிக்கை ஒன்று இச்சேவைகளுக்கு அனுப்பப்படும். உங்களுக்கும் இதன் பிரதி ஒன்று அனுப்பப்படும், மற்றும் உங்கள் அனுமதியுடன் உங்களது உள்ளூர் மருத்துவருக்கும் உங்களது குழந்தையின் மருத்துவருக்கும் பிரதிகள் அனுப்பப்படும். உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் தேவைப்படக்கூடிய சேவைகளையும் உதவியையும் பெற ‘ஒலியியலாள’ (Audiologist) ரும், ‘சமூகப் பணியாள’ (Social Worker) ரும் உதவுவர்.

உங்கள் குழந்தையின் செவித்திறன் சாதாரணமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அதற்குப் பின்னர் உங்கள் குழந்தையின் செவித்திறன் குறித்தோ அல்லது குழந்தையின் பேச்சு அல்லது மொழிவளர்ச்சி குறித்தோ நீங்கள் கவலையுற்றால், உங்கள் குழந்தையின் செவித்திறனை மீண்டும் பரிசோதிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

உங்களது குடும்ப மருத்துவரோடு இது குறித்துப் பேசுவது நலம். செவித்திற சோதனைகள் எவ்வயதிலும் செய்யப்படலாம்.

**மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து கீழ் வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:**

http://www.health.nsw.gov.au/kids-families

உள்ளூர்த் தொடர்பு/சந்திப்புநேர விபரங்கள்

சுகாதார அறிவுரைக்காக *healthdirect Australia* –உடன் தொடர்புகொள்ளுங்கள்.
http://www.healthdirect.gov.au/
**1800 022 222**

NSW GOVERNMENT | Health

© NSW Health September 2016 SHPN (NKF) 150246

**Tamil** - Why does my baby need a diagnostic assessment?